# சாட்சியின் வாக்குமூலம்

# திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்

O.S.No. 98 / 2012

DW6 : **திரு. டில்லி த/பெ. ராமலிங்கரெட்டி**

**24.04.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | தொழில் | : |
| தந்தைபெயர் | : | கிராமம் | : |
| வயது | : | வட்டம் | : |

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை :**

**நேரம் 13.22 மணி**

நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கும் வாதிக்கும் கிட்டதட்ட ஒரே வயது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நாங்கள் ஒரே ஊரில் ஆனால் வேவ்வேறு இடத்தில் வசித்து வருகிறோம். மல்லிகா மற்றும் அவரது சகோதரிகள் என்ன செய்துவருகிறார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தன்ராஜின் மகன்கள் என்ன செய்து வருகிறார்கள் என்று தெரியுமா பக்கத்து நிலத்தில் விவசாயம் செய்து வருகிறார்கள். வேணு மற்றும் அவரது சகோதரர்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னுடைய குடும்பத்தில் எவ்வளவு சொத்து உள்ளது என்று எனக்கு தெரியாது என் அப்பாவிற்கு தான் தெரியும். எங்கள் குடும்பத்திற்கு நிகரான சொத்து வேணு வீட்டிலும் அவரது சகோதரர் வீட்டில் இருந்தது என்றாலும் வேணு மற்றும் அவரது சகோதர்கள் என்னுடைய வீட்டில் பன்னை வேலை பார்த்தார்கள் என்பது தவறு என்றால் சரியல்ல. அவர்களுக்குள் பாகப்பிரிவினை எப்போது நடந்தது என்றால் சுமார் 25 வருடங்களுக்கு முன்பதாக நடந்தது. எப்போது என்று கூறுமுடியுமா என்றால்2000 ஆம் வருடமா என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. 2000 வருடத்திற்கு முன்பதாக பாகப்பிரிவினை நடைபெற்றதா என்றால் இல்லை. வேணு சகோதரர் தன்ராஜ் 19-04-1998ல் இறந்துவிட்டார் என்றாலும் 25 வருடத்திற்கு முன்பதாக பாகப்பிரிவினை நடைபெற்றது என்று நான்

கூறுவது பொய் என்றால் சரியல்ல. தன்ராஜ் இறக்கும்போது எங்கிருந்தார் என்றால் பாகல்மேடு காலனியில் இருந்தார். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் தன்ராஜ் இறக்கும்போது அவருடைய கழினியில் குடிசைபோட்டு ஊருக்குள் வரமுடியாத நிலையில் இருந்தார் என்றால் சரியல்ல. தன்ராஜின் குடும்பம் சண்டையின் காரணமாக ஊருக்குள் வராமல் நிர்பந்தத்தின் காரணமாக கழனியில் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். சண்டை 1994ல் ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அதனால் பஞ்சாயத்தார் முன்னிலையில் 25 வருடங்களுக்கு முன்பதாக பாகப்பிரிவினை ஏற்பட்டது என்று நான் கூறுவது பொய் என்றாலும் ஊருக்குள் வராமல் தன்ராஜ் குடும்பத்தினர் இருந்தார்கள் என்றால் சரியல்ல. நான் பாகப்பிரிவினை பேசும் இடத்தில் இருந்தேனா என்றால் இல்லை. அவ்வாறு நான் பாகப்பிரிவினை நடக்கும் இடத்தில் இல்லாமல் பாகப்பிரிவினை நடந்தது என கேள்விப்பட்டு நீதிமன்றத்தில் வந்து பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியம் அளிக்க எனக்க எந்த அருகதையும் இல்லை என்றால் சரியல்ல. வேணுவின் 2ஆவது மனைவியின் குழந்தைகளும் தன்ராஜின் குடும்பத்தினரும் பாகப்பிரிவினை செய்தபோது நான் அங்கிருந்தேனா என்றால் இல்லை. அவர்களுக்குள்ளாக பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள். எனக்கு எந்த பாகப்பிரிவினை குறித்து தெரியாது என்றாலும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் பற்றி தெரியாது என்றாலும் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**நேரம் 13.33 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.